# கண்ணீர் அஞ்சலி





மறைவு : ஆகஸ்ட் 8, 2021



அருள்தந்தை தாமஸ் செல்வராஜ் அவர்கள் இந்த மாதம் எட்டாம் தேதி இந்த பூவுலகை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் மறைவுக்கு RTP தமிழ் கத்தோலிக்க சங்கமானது, சங்க உறுப்பினர்கள் அனைவருடன் சேர்ந்து ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது. நம்முடைய சங்கமானது ஒரு அமைப்பாக மாறுவதற்கு முன்பே RTP பகுதியில் உள்ள தமிழ் கத்தோலிக்க மக்களை ஒருங்கிணைப்பத்திலும், அவர்களுக்கு தேவையான ஆன்மீக வழிக்காட்டுதலிலும் அவரின் அர்ப்பணிப்பு மகத்தானது. அப்போது அவர் Eden, NC-ல் உள்ள St. Joseph of the Hills தேவாலயத்தில் பங்கு தந்தையாக பணியாற்றிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு மாதமும் Eden-ல் இருந்து RTP வந்து நமக்காக தமிழில் திருப்பலி நிறைவேற்றி நம்மை ஒன்றிணைத்தார்கள். 2007-ல் ஒய்வு பெற்று, தாயகம் திரும்பி, கோயம்புத்தூரில் வாழ்ந்து வந்தார். நித்திய இளைப்பாற்றியை அவருக்கு அளிக்கவும், அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆறுதலும், இந்த இழப்பை ஏற்றுக்கொள்ள மன வலிமையையும் கொடுக்க வேண்டுமென்று நாம் அனைவரும் வேண்டுவோம்.